2021 செப்டம்பர் 1] *[திரு. சு. முத்துசாமி]*

ஏற்கெனவே அதில் உள்ள சிக்கல் என்னவென்றால், நிறைய பணியிடங்கள் காலியாகவுள்ளன. இன்னும் சொல்லப்போனால், தொழில்நுட்பப் பணியிடங்கள் காலியாகவுள்ளன. எல்லா மட்டத்திலும் காலியிடங்கள் இருக்கின்றன. எனவே, அவற்றையெல்லாம் சரி செய்வதற்கும், ஒழுங்குப்படுத்துவதற்கும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, நிலம் கையகப்படுத்தும்போது நிறைய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதையும் கவனிப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வழிமுறையைச் சொல்லியிருக்கிறார்கள். சட்டப்படி அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 11-35

6. 'தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்', 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' எனப் பெயர் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளில் குடிசைப் பகுதி மாற்று வாரியமும் இணைந்திருக்கிற காரணத்தால், அது சம்பந்தமாக ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.*

கோட்டையிலே இருந்தாலும் குடிசை வாழ் மக்களின் வாழ்க்கைக்காக, அவர்களுடைய முன்னேற்றத்திற்காகச் சிந்தித்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முறையாக ஆட்சிக்கு வந்தபோது, அந்த மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்காக குடிசைப் பகுதி மாற்று வாரியம் என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கினார். அதன்மூலமாக, பல்லாயிரக்கணக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டிக் கொடுத்தார். அன்றைக்கு மத்தியிலே அமைச்சராக இருந்த 'பாபுஜி' என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படக்கூடிய திரு. பாபு ஜெகஜீவன்ராம் அவர்களே, அந்தத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுப் பாராட்டி, புகழ்ந்து பேசியிருக்கிறார். மேலும், இது

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2021 செப்டம்பர் 1*

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களிலும் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற அவரது எண்ணத்தையும் அன்றைக்கு வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார். அந்தளவிற்கு இந்தக் குடிசை மாற்று வாரியம் மிகச் சிறப்பாக தன்னுடைய கடமையைச் செய்திருக்கிறது; செய்து கொண்டு வருகிறது.

ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த வாரியம், இனிமேல் 'தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்' (TAMILNADU URBAN HABITAT DEVELOPMENT BOARD) என்ற பெயரிலே அழைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல; குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும் உயர்த்திட வேண்டும்; அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என்பதை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) மதுரை, நாராயணபுரம், நான்குவழி உயர்மட்டச் சாலை கட்டுமானப் பணியின்போது நிகழ்ந்த விபத்து, உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு இந்த அறிவிப்பை வெளியிடுகிறேன். இன்று காலையிலே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொண்டுவரப்பட்டது. மதுரை, புதுநத்தம் சாலையில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் உயர்மட்ட மேம்பாலப் பணியின்போது, கடந்த 28-8-2021 அன்று ஏற்பட்ட விபத்தில்,